பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 27 ஞாயிற்றுக்கிழமை (11-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 176

# 1,60,000 மலையகத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க நெருக்குதல்!

## ஜனாதிபதியுடன் தொண்டா பேச்சு

கொழும்பு, ஓகஸ்ட் 11

ஒரு லட்சத்து அறுபதினாயிரம் மலையகத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கவேண்டும் என்று அரசாங்கத்துக்கு பெரும் நெருக்குதல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கால்நடை அபிவிருத்தி அமைச்சருமான எஸ். தொண்டமான், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசி—

மலையகத் தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதை விரைவுபடுத்தவேண்டும் — என்று வற்புறுத்தியதாகத் தெரியவந்துள்ளது.

மலையகத் தமிழர்களில் ஐந்தே கால் லட்சம் பேரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பவும் —

மூன்றே முக்கால் லட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கவும் —

வகை செய்யும் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் அறுபதுகளில் கைச்சாத்திடப்பட்டது.

ஆயினும் அந்த ஒப்பந்தம் உரிய முறையில் அமுல் செய்யப்படவில்லை. இலங்கை அரசின் நடைமுறைச் செயற்பாடுகளால் ஒப்பந்த அமுல் தாமதமானது.

மேலும் ஆண்டாண்டு காலமாகப் பல பரம்பரைகளாக மலையகத் தோட்டங்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 38 ஈழ அகதிகள் தமிழகம் வருகை!

லண்டன், ஒக. 11

இலங்கையிலிருந்து அண்மைக் காலத்தில் 38 ஈழத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்குச் சென்றிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

றோலர்கள், வள்ளங்கள் மூலம் இவர்கள் தமிழகக் கரையை அடைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த இரு வாரகாலத்தில் 17 பேர் இருகுழுக்களாக தமிழகம் சென்றனர். அவர்களில் ஏழு பேர் இளைஞர்கள்.

இது தவிர, கடந்த வியாழனன்று 21 ஈழத்தமிழர்கள் தமிழ் நாடு வந்து சேர்ந்ததாக தமிழக தலைமைப் பொலீஸ் அதிகாரி இராசசேகரன் நாயர் தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் தொழில் செய்து கொண்டிருந்த சமயம்—விடுதலைப்புலிகள் என்று கருதப்படுபவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழ அகதிகள் இடம்பெயர்வு பெருமளவில் இல்லை

ஈழத் தமிழ் அகதிகள் தமிழகம் செல்கின்றனர் என்ற தகவலை கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஊர்ஜிதப்படுத்தியுள்ள அதேசமயம்—

முன்னரைப் போன்ற பெரும் அகதிகள் வெளியேற்றம் தற்போது இடம்பெறவில்லை என்றும் அது குறிப்பிட்டதாக சிங்கப்பூர் வானொலி தெரிவித்தது.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் அது தமிழக அரசியல் களத்தில் மீண்டும் ஈழத் தமிழர் விவகாரத்தைச் சூடு பிடிக்க வைப்பதாக இருக்கும் என்று அவதானிகள் தெரிவித்தனர். (உ-3)

## அநுராதபுரம் துப்பாக்கிச்சூடு குறித்து படையினர் பலர் மீது விசாரணை

### எனினும் இதுவரை எவரும் கைதாகவில்லை

கொழும்பு, ஒக. 11

அநுராதபுரத்தில் நடந்த மகாபோதி பூசையில் ஜனாதிபதி கலந்து கொள்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பு அங்கு நடந்த துப்பாக்கிப்பிரயோகச் சம்பவம் குறித்து இரகசியப் பொலீஸ் உயர் மட்டக் குழு ஒன்று இராணுவத்தினர் உட்பட ஏராளமானவர்களை அநுராதபுரத்தில் விசாரணை செய்து வருகின்றது.

மகாபோதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள 200 க்கு மேற்பட்ட பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிகளையும் இக் குழுவினர் பரிசோதித்துப் பார்த்தனர்.

காவற் கடமையில் ஈடுபட்டவர்களின் துப்பாக்கியில் இருந்து வேட்டுத் தீர்க்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இச்சோதனை நடத்தப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் இதுவரை எவரும் கைதாகவில்லை

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி கொழும்பில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்த வைபவத்தில் ஜனாதிபதிக்குப் பதிலாக சபாநாயகர் கே. பி. ரத்நாயக்க பங்குபற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## கீரிமலையில் சிப்பாய் பலி மற்றும் ஒருவர் காயம்

கொழும்பு, ஒக. 11

நேற்று முன்தினம் கீரிமலையில் இடம்பெற்ற மோதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும், மற்றும் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கீரிமலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியோரை நோக்கி படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும்—

அப்போழுது அவர்கள் திருப்பித் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர் என்றும்—

இந்த மோதலிலேயே ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கரடிப்போக்குப் பகுதியில் இடையிடையே தாக்குதல்

கொழும்பு, ஒக. 11

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து, கிளிநொச்சிக்கு வடக்கே கரடிப்போக்குச் சந்திப் பகுதி வரை முன்னேறியிருக்கும் ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகள் அங்கு தாம் கைப்பற்றிய பிரதேசங்களை மேலும் பலப்படுத்தி வருவதாக இலங்கை வானொலி அறிவித்தது.

விடுதலைப் புலிகள் இடையிடையே மோட்டார் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்துகின்றனர் என்றும் —

பாதுகாக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு முன்னால் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது பாதுகாப்புப் படையினர் பீரங்கித் தாக்குதல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமது 2 பெரும் ஆட்லறிகளை படையினரே சேதமாக்கினர்

### நாடாளுமன்றில் அனுரத்த தகவல்

கொழும்பு, ஒக 11

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதுபுலிகள் தாக்குதல் நடத்திய சமயம், இராணுவ தந்திரோபாயங்களுக்கு அமைய திட்டமிட்டபடி படையினர் அந்த முகாமில் இருந்த சில ஆயுதங்களை அழித்தும், சேதப்படுத்தியும் இருந்தனர். படையினரால் அப்படி சேதப்படுத்தப்பட்ட ஆயுதங்களில் 122 எம். எம். ரக ஆட்லறிகள் இரண்டும் அடங்கும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் முல்லைத்தீவு மோதல் குறித்து விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இந்த ஆயுதங்கள் புலிகள் வசம் சிக்கி விட்டதாக ஐக்கிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் பஸ் எரிப்பு

அம்பாறை மாவட்டத்தில், அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸின் நடத்துனரிடம் இருந்து 600 ரூபா அபகரிக்கப் பட்டிருப்பதாகவும்—

பஸ்ஸை எரிந்தவர்கள் பின்னர் எலலாப் பயணிகளையும், சாரதியையும், நடத்துனரையும் விடுவித்தத கவும் டாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது. (இ-3)

## சி. ஐ. டியாக நடித்து தமிழரிடம் பணம் கறந்தவர்!

கொழும்பு, ஒக. 11

தாம் இரகசியப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் என்று நடித்து —

கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் உள்ள தமிழர்களின் விடுதிகள், வீடுகளில் பணம் பறித்த —

34 வயது இளைஞர் ஒருவரைப் புறக்கோட்டைப் பொலீஸார் கைது செய்தனர்.

சிவில் உடையில் சோதனையிடச் செல்லும் இரகசியப் பொலீஸ் அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போன்ற அடையாள அட்டை அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற் பயிற்சிகள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் ரிப்பியறிங் சகல இன றேடியோ ரெலிவிசன், வீடியோ டெக் திருத்தும் முறைகள் ஆரம்பத்தில் இருந்து செய்முறை பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம் 6 மாதம்

★ றீவைண்டிங், வயறிங் டைனமோ, மோட்டார், ரான்ஸ்போமர் வைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம் 5 மாதம்

★ **Electrical Engineering Technician City and Guids** (London Excam)

**பயிற்சிகள் ஆரம்பம்: 15 - 8 - 96**

விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி), யாழ்ப்பாணம்.

இசைப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

★ ஓகன் ★ கிற்றார்

ஆரம்பம்: **16 - 08 - 96**

(42200)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### மாசிலாமணி பாக்கியமலர்

மலர்வு: **26 - 06 - 1936**

உதிர்வு: **30 - 07 - 1989**

திதி: **11 - 08 - 1996**

தேவருலகில் வாழ்கின்ற - எங்கள்
தெய்வத்தின் திருநாளில்
பாமலர் தூவுகின்றோம் - நாளும்
'' பாக்கியமலர் '' காவுகின்றோம்.

பேசிச்சிரித்த முகம் பார்த்து - தாய்மைப்
பெட்டகத்துள் - தவழ்கின்றோம்.
வீசிச் சிரிக்கும் பொன்காற்றில் - மாசில்
வீணையின் தவமாகின்றோம்.

அம்மாவைப் பாடிடுவோம் - தினமும்
அம்மாவைப் பாடிடுவோம்
இம் மாநிலம் இருக்கும் வரையும் பெற்ற
எந் தாயை என்றும் வணங்கிடுவோம்.

ஆண்டுகள் பல கழிந்தாலும் அன்பு மறவாத,

**கணவன், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள்.**

'' மணிமலர் பவனம் ''
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

( 42177 )

## விமான, கப்பல் சேவைக்கு தனி அலுவலகம்

கொழும்பு, ஓக. 11

யாழ்ப்பாணத்துக்கான விமான, கப்பல் சேவைகளை கவனிக்க தனியான அலுவலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இப்படி வன்னி மாவட்ட எம். பி. திரு. எஸ். சண்முகநாதன் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார் (இ-3)

## நாய்களுக்கு நோய் தடுப்பூசி

தென்மராட்சி, ஓக. 11

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பின்வரும் இடங்களில வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் க. தா. சிவபாதம் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 13 ஆம் திகதி சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்திலும் —

15 ஆம் திகதி மட்டுவில் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்திலும் —

16 ஆம் திகதி மிருசுவில் தேவாலயத்திலும் —

20 ஆம் திகதி நுணாவில் அம்பாள் சனசமூக நிலையத்திலும் —

22 ஆம் திகதி அல்லாரை சனசமூக நிலையத்திலும்—

27 ஆம் திகதி கச்சாய் அம்மன் கோவிலடியிலும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-117)

## ஒருவாரத்தில் பிறப்பு - இறப்பு சான்றிதழ்

வடமராட்சி, ஓக. 11

யாழ். மேலதிக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்போருக்கு ஒரு வாரத்தில் சான்றிதழ்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை செயலகத்தில் உள்ள விற்பனை நிலையத்தில் வாங்கி நிரப்பிக் கொடுக்க வேண்டும் என்றும்—

செயலகத்துக்கு வெளியே தனியார் கடைகளில் விற்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் செல்லுபடியாகா என்றும்— மேலதிக பதிவாளர் அறிவித்துள்ளார்.

(இ-173)

## தபாற் பகுதி பதவிகள்

கொழும்பு, ஓக. 11

ஒருமுகப்படுத்தப்பட்ட தபால் சேவை பிரிவு 'பீ' தரம் இரண்டு பதவிக்கு, வடபிராந்திய பிரதித் தபால் மா அதிபர் அலுவலகம் விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

க. பொ. த. பத்திர உயர் தரப்பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு—

க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் சிறப்புச் சித்தி பெற்றோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்,

வயதெல்லை 18 முதல் 40 வரையாகும்.

நேர்முகப் பரீட்சை மூலம் நியமனம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு இம்மாதம் 23 ஆம் திகதியாகும்.

யாழ்.செயலகம், பிரதேச செயலகங்கள், தபாற் திணைக்களத்தின் யாழ் பிரந்திய அலுவலகம், பிரதம தபாலதிபர் அலுவலகம், பிராந்திய கணக்காளர் அலுவலகம், மற்றும் தபாற் கந்தோர்களில் மாதிரி விண்ணப்பப் படிவங்களைப் பார்வையிடலாம். (அ 3)

## யா/இராமநாதன் கல்லூரி

**1996** ஆம் ஆண்டிற்கான, முறைசாராக் கல்விப் பிரிவினால் நடாத்தப்படும்

1) விவசாய விஞ்ஞானம்.
2) ஹொட்டேல் முகாமைத்துவம்.

ஆகிய பயிற்சிகளுக்கு பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்களிடமிருந்து (இரு பாலாரிடமிருந்தும்) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **15 - 08 - 96**

அதிபர்

(சி/2746)

## தெஸ்பியன் கல்வி நிலையம்

**THESPEAN ACADEMY**

கே. கே. எஸ். வீதி, K. K. S. Road, இணுவில். Inuvil

**98 A/L**

### கலை, வர்த்தக வகுப்புக்கள்

**12-08-96** முதல் ஆரம்பமாகின்றன.
அனுமதிக்கு முந்துங்கள்.

**கலைப் பிரிவு:**

| | |
|---|---|
| தமிழ் | — திரு N. பாலா |
| இந்து சமயம் | — திரு. சத்திதாசன் |
| இந்து நாகரிகம் | — திரு R. ரட்ணம் |
| பொருளியல் | — திரு இ. துரைசிங்கம் |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. க. ஸ்ரீகந்தவேள் |
| புவியியல் | — திரு. S S. வாசன் |
| சமஸ்கிருதம் | — செல்வி இ. விமலா |
| ஆங்கிலம் | — திரு பத்மநாதன் |
| அரசியல் | — திரு. சி. இளங்கோ |
| சித்திரம் | — திரு. க. ரட்ணேஷ் |

**வர்த்தகப் பிரிவு:**

| | |
|---|---|
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. N. ராஜன் |
| பொருளியல் | — திரு. இ. துரைசிங்கம் |
| வணிகப் புள்ளி விபரவியல் | — திரு U. குணம் |

குறிப்பு:- **97 A/L** வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(42210)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்: **03 - 09 - 1958**

இறைவன் அடியில் **12 - 07 - 1996**

### திருமதி நவரட்ணம் புஸ்பராணி

அவர்கள்

அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் திருவுருவமாகியும் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் சுடர் வீசி அணையாத தீபமாகி எங்கள் ஐவரையும் மண்ணில் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்! அம்மா உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்-

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (11 - 08 - 96) நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் மறைவுக்கு அனுதாபச் செய்தி அனுப்பிய J C. C. அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

**கணவன், (வயறிங் நவம்)**
**பிள்ளைகள், தாய், சகோதரர்கள்,**
**மாமன், மாமி, மைத்துனர், மைத்துனிமார்.**

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(42193)

# ரெலிவிசன் கொள்வனவில் ரூ. 13 கோடி முறைகேடு

## ஜெயலலிதாவுக்கு எதிராக மற்றொரு வழக்கு

சென்னை, ஓக. 11 உள்ளாட்சி அமைப்பு அலுவலகங்களுக்காக 1995/1996 ஆம் ஆண்டில் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை (ரெலிவிஷன்) வாங்கியது தொடர்பான 13 கோடி ரூபா முறைகேடுகள் பற்றி முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது தமிழ்நாடு அரசு வழக்கு ஒன்றைப் பதிவு செய்யவிருப்பதாக முதலமைச்சர் மு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

உள்ளாட்சிதுறை மானியங்கள் தொடர்பாக சட்டப் பேரவையில் நடந்த விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய முதலமைச்சர், இந்த விடயத்தில் நிதித்துறைச் செயலாளர் எழுப்பியிருந்த எதிர்ப்புக்களையும் மீறி முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா செயற்பட்டிருக்கிறார் என்று தெரிவித்தார்.

முன்னதாக இந்த விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசிய உள்ளாட்சித்துறை அமைச்சர் கோசிமணி, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு 45 ஆயிரத்து 302 வர்ண தொலைக்காட்சிப்பெட்டிகள் வாங்குவதற்கு செல்வி ஜெயலலிதா அனுமதி வழங்கினார் என்றும்—

இதற்கான முடிவு அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் நே டியாக மேற்கொள்ளப்பட்டது என்றும் —

இது தொடர்பாக அதிகாரக் கீழ் நிலைகளில் எந்த நடவடிக்கையும் இல்லாமல் பொது ரெண்டர் எதுவும் கோரப்படாமல் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக ஏற்கனவே லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் —

தாம் கைதுசெய்யப்படலாம் என்று அஞ்சி, சென்னை உயர் நீதிமன்றத்தில் அவர் முன்பிணை அனுமதி கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருப்பதும் தெரிந்ததே.

செல்வி ஜெயலலிதா 3லட்சம் அமெரிக்க டொலரை நன்கொடையாகப் பெற்றிருப்பது குறித்து மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட இருக்கிறது.

மத்திய நிதியமைச்சகத்தின் 1992 ஆம் ஆண்டு சலுகைத் திட்டத்தின் கீழ் மூன்று லட்சம் அமெரிக்க டொலர்களை அவர் பெற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப் படுகிறது. இது தொடர்பான வழக்கை மத்திய புலனாய்வுத்துறை விசாரிக்க விருக்கிறது.

இந்த வழக்கை மாநில காவல்துறையிடம் இருந்து மத்திய புலனாய்வுத்துறைக்கு மாற்றுவதற்கான அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

மத்திய புலனாய்வுத்துறை நிர்வாகப்பொறுப்பு வகிக்கும் மத்திய பணியாளர் துறை இணை அமைச்சர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் உத்தரவிட்டுள்ளதையடுத்து செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யுமாறு மத்திய அரசு சி.பி.ஐ.யை கேட்டுள்ளது.

அரசியல் அதிகாரம் பெற்ற ஒருவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருப்பதினால் இந்த வழக்கை மத்திய புலனாய்வுத்துறைக்கு மாற்ற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. (இ-3)

## இஸ்ரேல் அமைச்சரவையில் கருத்து வேற்றுமை

இஸ்ரேல் பிரதமருக்கும் இஸ்ரேல் வெளிநாட்டு அமைச்சருக்கும் இடையிலான கருத்து வேற்றுமை தற்போது உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் ஆட்சிக்கு வந்த வலதுசாரி அரசாங்கத்தின் பிரதமருக்கும், வெளிநாட்டு அமைச்சருக்கும் இடையே உருவாகியுள்ள கருத்து வேற்றுமை காரணமாக வெளிநாட்டு அமைச்சர் டேவிட் லீவி தமது பதவியை ராஜினாமா செய்யக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-10)

## டாங்கி எதிர்ப்பு ஏவுகணை இந்தியாவில் தயாரிப்பு

சென்னை, ஓக. 11 டாங்கிகளை எதிர்க்கும் ''நாக்'' ஏவுகணைகளை இந்தியா வெற்றிகரமாக சோதித்துப் பார்த்திருப்பதாக பாதுகாப்புத்துறை விஞ்ஞானி எஸ்.வி. அப்துல்கலாம் தெரிவித்தார்.

ஒரிஸா மாநிலம் சண்டிப்பூர் ஏவுகணை சோதனை நிலையத்தில் இது வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

புதுடில்லியில் அறிவியலுக்கான ''ஜுஜமல் ஜோதி'' விருதினைப் பெற்றுக்கொண்டு பேசிய டாக்டர் அப்துல் கலாம் இதனைத் தெரிவித்தார்.

விருதினை வழங்கிப் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் இந்திரகுமார் குஜரால் தொழில் நுட்பத்தை மேம்படுத்தும் உரிமையை இந்தியா தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்தார். (இ-3)

## ஈரானுடன் நல்லுறவை வளர்க்க ஈராக் விருப்பம்

பாக்தாத், ஓக. 11 ஈரானுக்கும் ஈராக்குக்குமிடையேயான வேற்றுமைகள் அகற்றப்பட்டு ஒற்றுமையும் நல்லுறவும் ஏற்படவேண்டும் என ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் மகன் நடத்துகிற முன்னணிப் பத்திரிகையான பாபே தலையங்கங்கள் எழுதியுள்ளது.

எட்டு ஆண்டுகளாக 1980 முதல் 88 வரை இரு நாடுகளும் யுத்தத்தில் ஈடுபட்டன. இருதரப்பிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கொன்று அழிக்கப்பட்டனர்.

இன்றுவரை இரு நாடுகளும் பரம விரோதிகளாகவே இருந்து வருகின்றன.

இப்போது இரு நாடுகளுக்குமே அமெரிக்கா நெருக்கடி கொடுத்து வருவதால் பழைய வேற்றுமைகளை மறந்து மீண்டும் இரு நாடுகளும் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## செவ்வாயில் உயிரினம்?

வாஷிங்டன், ஓக. 11 செவ்வாய்க் கிரகத்திலிருந்து வந்த விண் கல் ஒன்றில் உயிர்க்கூறுகள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அட்லாண்டிக்காவில் கண்டெடுக்கப்பட்ட அந்த விண் கல் இரண்டு ஆண்டு காலமாக ஆராயப்பட்டு வருகிறது.

அந்த ஆராய்ச்சி பற்றி முன் கூட்டியே வெளிவந்த தகவல்களின்படி, செவ்வாய்க் கிரகத்தில் 1 கோடி 50 லட்சம் வருடங்களுக்கு முன்பு ஏதோ ஒரு வகையிலான பக்றீரியா இருந்துள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியே தற்போதைய விண் கல்லின் உயிர்க்கூறுகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (இ-5)

## உலக அரங்கில்

## குஜராத்தில் புதிய கட்சி

புதுடில்லி, ஓக. 11 குஜராத்தில் பாரதீய ஜனதா கட்சி அதிருப்தியாளர் குழுத் தலைவரான சங்கர் சிங்வாகேலா புதிய பிராந்தியக் கட்சி ஒன்றைத் தொடங்குவது குறித்த தமது திட்டத்தை அஹமதாபாத்தில் இந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாநாட்டில் மேலும் முன்னெடுத்துச் செல்லப் போவதாக அறிவித்துள்ளார்.

## கிருஷ்ணா நதி பிரச்சினை; கர்நாடகத்துக்கு சலுகை

### தெலுங்கு தேசம் போர்க்கொடி

புதுடில்லி, ஓக. 11 இந்தியாவில் ஆளும் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தெலுங்கு தேசக்கட்சி பிரதமர் தேவகௌடாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் கிருஷ்ணா நதியை இடைமறித்து அலமாக்கி என்ற இடத்தில் அணை கட்ட கர்நாடக மாநிலத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதோடு, தேசியநீர்ப்பாசன திட்டங்களுக்கான நிதியில் ஐந்தில் ஒரு பகுதியை கர்நாடக மாநிலத்துக்கு ஒதுக்கியும் உள்ளது.

இதனால் ஆந்திர மாநிலத்துக்கு கிருஷ்ணா நதி வரத்துக் குறையுமென ஆந்திரா அரசு அஞ்சுகின்றது.

பிரதமர் தேவகௌடா இந்தியாவின் பிரதமர் என்பதை மறந்துகர்நாடகமுதலமைச்சர் போல் நடந்து கொள்கிறார் என்று மூத்த தெலுங்கு தேச உறுப்பினர் ஒருவர் நேற்றுக் குற்றம் சாட்டினார்

## தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்கள் திண்டாட்டம்

### 'மொடியூல்'கள், வந்து சேரவில்லை

யாழ் மாவட்டத்தில் உள்ள தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான ''மொடியூல்கள்'' உரியவேளையில் பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்படாததால் பரீட்சைக்கு உரிய முறையில் தயார் செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது.

தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்களுக்கான பகுதி I பகுதி II பரீட்சைகள் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெறும் காலம் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட போதிலும் பரீட்சைக்கு தயார் செய்வதற்கான ''மொடியூல்'' இன்று வரை யாழ் மாவட்டத்திற்கு வந்து சேரவில்லை.

அண்மைக்கால நிகழ்வுகளால் முன்பு பயிற்சி பெற்ற பயிற்சி ஆசிரியர்கள் பயன்படுத்திய மொடியூல்களும் சேதமடைந்திருப்பதால் ''மொடியூல்கள்'' இல்லாத நிலையில் பரீட்சைக்கு தயார் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ-11)

## மெதடிஸ்த திருச்சபையின் சிறுவர் இல்லத்தில் சிகிச்சை

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் சிறுவர் இல்லத்தில் உள்ள 130 சிறார்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது.

இச் சிறுவர் இல்லத்தில் கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை போதகர் வண. எஸ். ஜே. மேதரினால் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை முகாமில் மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கதிரைவேற்பிள்ளை, கரவெட்டி சின்னத் தம்பி ஞாபகார்த்த கிராமிய வைத்திய சாலை வைத்திய அதிகாரி டாக்டர் எம் யோகேஸ்வர தேவன் ஆகியோர் சிறுவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி சிகிச்சை அளித்தனர். (இ-178)

## செல்லச்சாமியைப் பயன் படுத்தி என்னை வீழ்த்த அரசு முயற்சிக்கிறது

### தொண்டா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 11 மலையகத்தில் எனது தலைமையை முறியடிக்கும் நோக்கத்துடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு செல்லச்சாமியைப் பயன்படுத்த முயற்சிக்கிறது.

இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் அரசு மீது மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

இதேபோன்று விஜேதுங்காவின் அரசும் முயற்சித்தது. ஆனால் முடியவில்லை 'மலையகத்தில் எனக்குள்ள செல்வாக்கை வீழ்த்த எவராலும் முடியாது என்றும் அவர் கூறினார் என்று '' லங்காதீப '' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் மலையகத்தில் இடம்பெற்ற தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் 65 சத வீதமானோர் ஈடுபட்டதாகவும் —

இந்த அடையாள வேலை நிறுத்தம் வெற்றியடைந்துள்ளது எனவும்—தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செல்லச்சாமி தெரிவித்தார்.

தனதுபதவியைத்தக்கவைப்பதற்காக தொழிலாளர்களின் உரிமைகளை தொண்டமான் தாரைவார்த்துக் கொடுத்துள்ளார் எனவும் செல்லச்சாமி குற்றஞ்சாட்டினார்.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பிரதி அமைச்சர் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் பங்கு பற்றியது. (இ-10)

## பிரிட்டிஷ் உதவியுடன் குடாநாட்டுக்கு மின்சாரம்

### 12 லட்சம் டொலர் செலவில்

கொழும்பு, ஓக. 10 யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு பிரிட்டிஷ் உதவியுடன் மீண்டும் மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இதற்காக 12 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை அரசும் பிரிட்டிஷ் அரசும் கைச்சாத்திட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டின் மின் தேவையை மதிப்பீடு செய்யவென, இரண்டு பிரிட்டிஷ் மின்சாரப் பொறியியலாளர்கள், பிரதி உயர்ஸ்தானிகர் பீட்ட கெரகரி கூட் சகிதம் ஜூன் மாத முற்பகுதியில் விஜயம் செய்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மின்சார சபைக்கு, இடத்திற்கு இடம் கொண்டு செல்லக் கூடிய ஜெனரேட்டர்களையும் சாதனங்களையும் புதிதாகக் கொள்வனவு செய்யுமாறு குழுவினர் சிபார்சு செய்திருந்தார்கள்.

இதனை அடுத்தே ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது. (இ-10-5)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுடன் கூடிய 1½ பரப்பு காணி நல்ல தண்ணீர் வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு. வீட்டுத் தளபாடங்களும், பாவனைப் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. நரேந்திரன், இல 383/1 நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். (42192)

மண்ணெண்ணெய்க்கு மாற்றாத 6 ஸ்ரீ பேஜோ 404, கார் (Pengeot 404) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 15/14, A. சங்கிலியன் வீதி, நல்லூர். (42171)

### விநியோகிக்கப் படுகிறது

Dr. அல்போன்சஸ் அத்தனாசியார் (சில்லாலை) இல. 372, பிரதான வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (பழைய இடத்தில்) மீண்டும் இயங்குகின்றது. சகல விதமான மருந்தெண்ணெய் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். மருந்தெண்ணெய் விநியோகம் மட்டும் நடைபெறும். (42165)

### கணிதம், ஆங்கிலம்

O/L Distinction, Credit பெறுபேறடைய, தவணைப் பரீட்சைகளில் ஆண்டு 6, 7, 8 9, 10 மாணவர்கள் உயர்ந்த பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. [42172]

### இடமாற்றம்

மானிப்பாயில் இயங்கிய Dr. பாலபாஸ்கரனின் வைத்தியசாலையும், எனது வைத்தியசாலையும் மாலையில் மட்டும் ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில், இயங்குகின்றது. Dr. K. சிவனடியான். (42158)

### விண்ணப்பப் படிவம்

புதிய ஆசிரியர் இடமாற்றுப் படிவம் விற்பனையாகின்றது. தபாலில் பெற விரும்புவோர் ரூபா - 6.00 பெறுமதியான முத்திரையும், சுயவிலாசம் இட்ட கடித உறையும் அனுப்பவும். நாயகபாலன் புத்தக களஞ்சியம், மானிப்பாய். (42189)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி, தபால்வழி ஆரம்பமாகிறது. கடைசித் தகைமை க.பொ.த (சா/த). தற்காலிகமாக, தாமதமாகியிருந்த மாணவரும் தொடர்பு கொள்க: பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா, திரு. வி. கே. கந்தசாமி, வைரவர் கோவிலடி, "பழமுதிர்ச் சோலை", 20, அச்சக ஒழுங்கை, தலையாழி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42154)

### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்ளர், தண்ணீர் ரம்ளர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம்(வைற் கவுஸ் அருகில்)172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

### இலவச திருமண சேவை

உயர்குல பொறியியலாளர், டாக்டர்களுடன் செவ்வாய் குற்றமுள்ள தங்கை ஆசிரியைகளுடன் மாற்றாகவோ, தனியாகவோ முப்பத்தாறு வயதுக்குள் துணைகள் தேவை. பல ஜோடிகள் உண்டு. தொடர்பு நேரில் மட்டும். க. நடராஜா, மே/பா முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (42175)

### இலவச திருமண சேவை

வசதியான, சகல மதமும், ஏழில்செவ்வாய்க் குற்றமுள்ள பட்டதாரி ஆசிரியர்கள், ஆசிரியைகளுக்கும் துணைகள் தேவை. தொடர்பு நேரில் மட்டும். (காலையில்) க. நடராஜா, மே/பா முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன் தெற்கு. (42174)

### காணவில்லை

ஆண்களுக்கான வெள்ளி கைக்கடிகாரம் திருநெல்வேலி பாற்பண்ணைக்கும் நல்லூரிற்கும் இடையில் தோவில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:- ச. விவேகானந்தன் (ஆனந்தன்) சுவைச் சோலை 608/2, பருத்தித்துறை வீதி, நல்லூர். (32208)

### மணமகன் தேவை

லக்கினத்தில் செவ்வாயுள்ள 33 வயதான குருகுலப் பட்டதாரி ஆசிரியைக்கு அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு இல:- 511, மே/பா உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42141)

### புலமைப்பரிசில் '96

வழமைபோல் ஆண்டு 5 புலமைப் பரிசில் 12 ஆவது மாதிரிப் பரீட்சை 11-08-96 ஞாயிறு 6 பிரிவுகளாக நடத்தப்படும். பரீட்சைப்பகுதி, Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (42197)

### சோதிடம்

வெளியூர் ஜெனன சாதகக் குறிப்புகள் எழுத உங்கள் எதிர்கால பலாபலன்கள் திருமணப் பொருத்தங்கள் பார்க்க, ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோவில் வீதி, முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம். (42205)

### ஒலிப் பதிவாளர்

5 வருட முன் அனுபவமுள்ள ஒலிப்பதிவாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும். சிபார்சுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. விண்ணப்பங்களை: மே/பா, இல:- 512, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவும் [சி-2742]

## சைக்கிள் இலக்கத் தகடு

பருத்தித்துறை பிரதேச சபையினால் இந்த ஆண்டுக்கான சைக்கிள் இலக்கத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சபையின் புலோலி, குடத்தனை, உப அலுவலகங்களில் வைத்து இத் தகடுகள் விநியோகிக்கப்படுகின்றன. (இ-173)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

## பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் 25–08–1996 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு (புதிய நேரம்) உடுப்பிட்டி அ. மி. கல்லூரி பேராசிரியர் துரைராசா ஞாபகார்த்த மண்டபத்தில் Dr. எம். தங்கராசா தலைமையில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி தயவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரேரணைகள் இருப்பின் 15 - 08 – 96-ற்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
(42195)

# மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள்

(விடைகளுடன்)

★ G. C. E. AL

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — ECONOMICS | — TAMIL |
| PHYSICS | — COMMERCE | — HINDU - CIVIL. |
| BOTANY | — ACCOUNTS | — GEOGRAPHY |
| ZOOLOGY | — LOGIC | — DRAMA |
| PURE MATHS | — HINDUISM | — CHRISTIANITY |
| APP. MATHS | — POL. SCIENCE | — HISTORY |

பாடங்களுக்கான — மாதிரிப் பயிற்சி

★ G.C.E. O/L — எல்லாப் பாடங்களும்.

★ 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆம் ஆண்டு வகுப்புகளுக்கான — எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சிகள் எம்மிடம் மாதாந்தம் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி - BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(42198)

உ
சிவமயம்

# முதலாவது பிறந்த தின வாழ்த்து

பிரம்மஸ்ரீ
சோ. இலட்சுமிநாராயண சர்மா - இ. சிவாஜினி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

## ★ செல்வி ஷிந்துஜா ★

சித்தன்கேணியைச் சேர்ந்த ஆசிரிய பண்டிதர் ஏ. சோமசுந்தரஐயர் - சரஸ்வதியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வன் இலட்சுமி நாராயண சர்மாவினதும், கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சார்ந்த கா. தியாகராஜக் குருக்கள் - புவனேஸ்வரியம்மா தம்பதிகளின் புதல்வியான சிவாஜினியினதும் அன்புப் புதல்வி "ஷிந்துஜா" அவர்கள் 11-08-1996 ஞாயிற்றுக்கிழமை சங்கானையிலுள்ள இல்லத்தில் தமது முதலாவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, பாட்டி, மாமன்மார்கள், மாமிமார்கள், பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சங்கானை சிங்கப்பூர், சிங்கபுர சிவஞான வைரவப் பெருமானின் அருளாசியால் சகல சௌபாக்கியங்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சுபமஸ்து.

இங்ஙனம்:
ஏ. சோமசுந்தர இலட்சுமி நாராயண சர்மா–
சிவாஜினி தம்பதிகள்.

சிங்கப்பூர், சிவஞான வைரவ கோவில்,
சங்கானை. (சி-2744)

## Mc LEOD வைத்தியசாலை

Mc Leod வைத்தியசாலை வழமைபோல 24 மணி நேரமும் இயங்குகின்றது. புதன்கிழமைகளில் விசேட மகப்பேற்று வைத்திய ஆலோசகர் Dr. Mrs. C. Ambalavanar, M. B. B. S, F. R. C. O. G (U.K) காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை நோயாளர்களை பார்வையிடுவார்.

Mc LEOD வைத்தியசாலை,
K. K. S Road,
Inuvil. (42202)

## நீங்கா நினைவின் 31 ஆம் நாள்

மலர்வு: 17-5-1899 உதிர்வு: 13-7-1996

## திருமதி அருளப்பு எலிசபேத்
(பொன்னம்மா)

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறவோம்"
மண்ணக வாழ்வில் இறைவன் இவவுக்களித்த
அனைத்து நன்மைகளுக்காகவும் இறைவா உமக்கு
நன்றி ஏற்றருளும்.
இறைவா! பெருந்துன்பம் சுமந்தெம்மை
தனிமையில்
எளிமையில் நிறைவைக் காட்டி, அன்பினால்
ஆட்சி செய்து,
தேவ பண்பில் வழிநடத்தி, தள்ளாத வயதினிலும்
நினைவில் நிதானமாக, கண்ணில் ஒளியாக,
காதில் ஒலியாக
நினைவில் அழியா முத்திரைகள் ஆறிணையும்
நல் அறிவுடனும்,
ஆசையுடனும் பெற்று, செபமாலை கையுரைஞ்சி
அன்னைமரியின் அரவணைப்பில் அமைதியாக
துயில்கின்ற

எமது பாசம்மிகு அன்னையே!
கல்லறையில் உடலை வைத்து
கண்ணீரால் அதை நிறைத்து
கையினாலே மண் இட்டும், நினைவினிலே
உம் நினைவை மறக்கும் நாள் என்றோ அம்மா!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-08-96, திங்கட்கிழமை காலை 6-15க்கு புனித மரியன்னை யாழ். பேராலயம் யாழ்ப்பாணத்திலும், புனித நீக்கிலார் ஆலயம் மிருசுவிலிலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். ஆன்ம சாந்திக்காக, மன்றாடவும்.

நன்றி:
பிரிவால் துயருறும்,
மகன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டன்: டிமோன் லோறன்ஸ்.

மிருசுவில் (42206)

உதயன்

## மருந்து தட்டுப்பாடு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மருந்து வகைகளுக்கு பெரும் பற்றாக்குறை— தட்டுப்பாடு— நிலவுகிறது. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை கூட அதற்கு விதி விலக்கல்ல.

அங்கு கிளினிக் மற்றும் வெளிநோயாளர் பிரிவுகளில் டாக்டர்கள் நோயாளர்களைச் சோதித்த பின்னர் மருந்துச் சீட்டுகளை எழுதிக் கொடுக்கிறார்கள். அவற்றில் பெரும்பாலானவை ஆஸ்பத்திரி மருந்தகத்தில் இருப்பதில்லை. வெளியே தனியார் மருந்தகங்களிலும் கிடைப்பதில்லை.

விசேட மருந்து வகைகள் மட்டுமன்றி சாதாரண நோய்களுக்குரிய வழமையான மருந்து வகைகளுக்குக் கூடத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் நோயாளர்கள்— மக்கள்— பெரிதும் கஷ்டப் படுகிறார்கள்.

உடலுக்கு, அதன் இயக்கத்துக்கு, உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது உணவு. அது போன்றே மருந்தும் பிரதானமானது. உணவு இல்லாவிடில் இரண்டொரு நாள் பட்டினியிருந்தாவது உயிர் வாழ முடியும். ஆனால் மருந்தில்லாவிடில் அதன் பாதிப்பு உயிராபத்தானதாக மாறி விடும்.

ஒரு பிரதேச அல்லது பகுதி மக்கள் சுகதேகிகளாக வாழ்ந்தாலே அந்தப் பிரதேசம் எந்தத்துறையிலும் முன்னேறலாம். நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மனித வளம் மிக அவசியமானது அந்த மனித வளம் கிடைப்பதற்கு நோய் நொடியற்ற மக்கள் சமூகம் தேவை. நோயில்லாத மக்களை உருவாக்குவதற்கு போசாக்குள்ள உணவும், மருந்து வகைகளும் இன்றியமையாதவை.

இந்த இரண்டில் ஒன்றில்லாவிடினும் உடற்பலமில்லாத நோஞ்சான் மக்களையே காணமுடியும். அத்தகைய ஒரு நிலையை அடையக் கூடிய தன்மையே இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் உண்டு.

உணவுப் பொருள்கள் சந்தையில் கிடைத்தாலும் விலைகளோ எக்கச்சக்கம். எனவே போசாக்கான உணவை உட்கொள்ளக்கூடிய வாய்ப்பு மக்களில் மிகப் பலருக்கு இல்லை. ஏதோ வயிற்றுப் பசிக்குச் சாப்பிட்டோம் என்ற அளவிலேயே பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் நாள்களை நகர்த்துகின்றன.

அதனால் நோய் எதிர்ப்புச் சக்தியை இழந்தவர்களாக இவர்கள் பல்வேறு வகைப்பட்ட நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.

நோய் தீர்க்கும் பிரதான, வழமையான மருந்துகள் இல்லாததால், அவர்கள் தொடர்ந்தும் நோயாளர்களாகவே கஷ்டப்பட நேரிடுகிறது. இந்த நிலையை நீக்குவதற்கு போதிய மருந்து வகைகள் யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட வேண்டும்.

நோயற்ற வாழ்வு தான் ஒரு மனிதனின் குறைவற்ற செல்வம். நோயில்லாத மக்களை உருவாக்கினால்தான் நாட்டிலும் செல்வம் பெருகும்.

மருந்து வகைகள் தாராளமாகவும், நியாய விலைகளில் கிடைக்கவும் அரசு வகை செய்ய வேண்டும். அவ்வாறில்லையேல் குடாநாட்டில் இயல்பு வாழ்க்கையையும் உற்பத்தி வளர்ச்சியையும் ஒரு போதும் எட்டமுடியாது. எல்லாம் வெறும் வாய்ச் சொல்லாக, நீர் மேல் எழுத்தாகவே முடியும்.

# புலிகளுக்கெதிரான யுத்தமா? அல்லது பொது மக்களுக்கெதிரான யுத்தமா?

### புளொட் எம்.பி. கேட்கிறார்

கொழும்பு, ஓக. 11

வடபகுதிக்கு முன்னர் தினமும் 300 லொறிகள் வரை அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் கடந்த மாதம் 17 ஆம் திகதிக்குப் பின்னர் ஒரு உணவு லொறியாவது வடபகுதி செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

இது புலிகளுக்கு எதிரான யுத்தமா? அல்லது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமா? என எண்ணத் தோன்றுகிறது.

வன்னி மாவட்ட புளொட் எம்.பி. திரு சண்முகநாதன் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கேட்டார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலம் நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நடந்த வேளை அவர் மேற்கண்டவாறு கேட்டார்.

கொழும்பு மாவட்ட ஐ.தே.க எம்.பி. கருணாசேன கொடித்துவக்கு பேசுகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததும் இந்த யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படும் என பொதுமக்கள் கருதினர்.

ஆயினும் இன்றுவரை அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

முறையான தலைமைத்துவம் இல்லாமையால்தான் முல்லைத்தீவில் பாதுகாப்பு படையினர் பலரை இழந்து விட நேர்ந்தது.

முல்லைத்தீவு இழப்புப் பற்றி அரசாங்கம் உண்மையை மறைக்க முயன்றாலும் வெளிநாட்டுப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து அம்பலப் படுத்தியுள்ளன என்றார்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பேசுகையில்,

யுத்தமின்றி ஏற்படும் தற்காலிக தடைகளினால் நாம் பதவி துறக்க வேண்டிய அவசியமில்லை. கெரில்லா யுத்தத்தில் மக்களிடமிருந்து புலிகளை தனிமைப்படுத்தியே நாம் வென்றாக வேண்டும்.

நாம் இதில் வென்று வடபகுதி மக்களின் தேவைகளை — வசதிகளை — செய்து கொடுக்கவே விரும்புகின்றோம்.

வடபகுதிக்கு தேவையான உணவு வகைகள் பருத்தித் துறையில் இறக்கப் படுகின்றன.

தரை மார்க்கமாக உணவுப் பொருள்களை கிளிநொச்சிக்கு கொண்டு வருவது புலிகளின் நடவடிக்கையினால் தடைப்படுகின்றது என்றார்.

தேசிய நல்லிணக்க பிரதியமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ள பேசுகையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் போல பேசுகின்றனர்.

இது நாட்டுக்கு நன்மை தரும் விடயமல்ல என்றார்.

ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி அனுரா பண்டார நாயக்கா பேசுகையில்,

அரசாங்கத்தின் அசட்டைத் தனத்தால் தான் முல்லைத் தீவில் பெரும் இழப்பு ஏற்பட்டது முன் எச்சரிக்கை செய்யப்பட்டும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதனால் பெருந் தொகையான ஆயுதங்களையும், படையினரையும் இழக்க நேரிட்டது என்றார் (இ-5)

## டெண்டுல்கர் புதிய கப்டன்

மணிலா, ஓக. 11

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய கப்டனாக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

கடந்த ஏழு வருடங்களாக அணித் தலைவர் பதவி வகித்த முகமட் அஸாருடீனின் இடத்துக்கு டெண்டுல்கர் நியமிக்கப்படுகின்றார்.

ஐந்து பேரைக் கொண்ட இந்தியகிரிக்கெட் தெரிவுக்குழு இரண்டரை மணி நேர ஆலோசனையின் பின் இம் முடிவை எடுத்ததாக தெரிவுக் குழுத் தலைவர் குண்டப்பா விஸ்வநாத் தெரிவித்தார்.

சிங்கர் கிண்ண ஆட்டத்துக்காக இலங்கைவரும் இந்திய அணிக்கு டெண்டுல்கர் தலைமை வகிப்பார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரதேச செயலக விசேட அடையாள அட்டை

### செவ்வாய் முதல் விநியோகம்

கொழும்புத்துறை, ஓக.11

பாடசாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றில் புகைப் படமெடுத்து விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைத்த யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்போரின் விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் றக்கா வீதியிலமைந்துள்ள யாழ்ப்பாண்ம் பிரதேச செயலகத்தில் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர். பிரிவைச்சார்ந்த கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட குடும்ப விவரப் பதிவினைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் பிரதேசச் செயலாளர் குணராசா தெரிவித்துள்ளார்.

(இ-30)

## தெல்லிப்பளை ப.நோ.கூ.ச. உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம் ஓக. 11

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தற்போது வசிக்கும் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க எல்லைப்பரப்புக்கு உட்பட்ட பிரதேச மக்கள், தங்களுக்கான இடம்பெயர்ந்த முத்திரைப் புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்களை திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தெல்லிப்பளை பு.நோ.கூ. சங்க கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

இதற்கான பதிவு மாற்றங்களைச் செய்வதற்குத் தத்தமது உ பங்கீட்டு அட்டை குடும்ப விவரப் பதிவு ஆகியவற்றுடன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு சமுகமளிக்குமாறும் — கோரப்பட்டுள்ளது.

(இ)

## தமிழக

## கரையோர காவல் படைக்கு நவீன ரகக் கப்பல்கள்

தமிழக கடலோரக் காவல் படைக்கு அடுத்த ஆண்டுக்குள் 3 அதிவேக ரோந்துக் கப்பல்களும், 2 நவீன ரக ரோந்துக் கப்பல்களும், 4 வழிமறிப்புப் படகுகளும், 3 டோனியோ ரக விமானங்களும் வழங்கப்படும்.

இப்படி மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் என்.வி.சோமு தெரிவித்தார்.

சென்னையில் கரையோரக் காவல் படையில் மிக உயர்ந்த சேவை புரிந்த அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவரின் பதக்கங்களை வழங்கி அவர் உரையாற்றினார்.

தமிழகக் கடல் எல்லை வழியாக ஆயுதங்களும், போதைப் பொருள்களும் வெடி மருந்துகளும் கடத்தப்படாமல் இருப்பதற்காக கடலோரக் காவற் படை விழிப்புடன் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(இ-3)

## அரச ஊழியர் வசதி கருதி

# யாழ் – பருத்தித்துறை புதிய பஸ் சேவை

வடமராட்சி, ஓக. 11

அரச ஊழியர்களின் வசதி கருதி பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நாளை 12 ஆம் திகதி முதல் புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை டிப்போவினால் ஆரம்பிக்கப்படும் இச் சேவையில் ஈடுபடும் பஸ் பருத்தித்துறையிலிருந்து வேலை நாள்களில் தினமும் காலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும்.

நெல்லியடி ஊடாக செல்லும் இப் பஸ் முத்திரைச்சந்தி வழியாக யாழ். செயலகத்தை சென்றடைந்து அங்கிருந்து யாழ். மத்திய பஸ் நிலையம் போய்ச்சேரும்.

இதேபோன்று பிற்பகலில் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படும் இப் பஸ் யாழ். செயலகம், முத்திரைச் சந்தி, நெல்லியடி ஊடாக பருத்தித்துறையை வந்தடையும்.

[இ-173]

## ரயில் பாதுகாப்புக்கு பயணிகளை அமர்த்த முடிவு

### சோதனைகளில் ஈடுபடுவர்

ரயில் பயணிகளின் பாதுகாப்புக்காக ரயில் பயணிகளைக் கொண்ட பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டவிருக்கின்றன.

ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் 15 பயணிகள் இக் குழுக்களில் அங்கம் வகிப்பர்

இப்பொறுப்பை சுய விருப்பத்தின் பேரில் ஏற்றுக் கொள்ள முன்வரும் பயணிகளின் பெயர்களை சேகரித்துத் தருமாறு ரயில்வே திணைக்களம் ரயில் நிலைய அதிபர்களிடம் கேட்டுள்ளது.

இவ்விதம் நியமிக்கப்படுவோருக்கு திணைக்களம் அடையாள அட்டைகளையும் வழங்கும்.

சந்தேகத்துக்குரிய நபர்கள் குறித்தும். சந்தேகிக்கப்படும் பார்சல்கள் குறித்தும் பரிசோதனைகளை நடத்துவதே இவர்களின் பணியாக இருக்கும்.

(இ-3)

## இடம் பெயராமல் தங்கிய உள்ளூராட்சி ஓய்வூதியர்

கடந்த ஒக்ரோபர் மாதம் மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ளூராட்சிச்சேவை ஓய்வூதியர் ஆறுபேர் இடம் பெயராமல் இருந்தார்கள்.

அவர்களுக்கு 1995 ஒக்ரோபர் தொடக்கம் ஓய்வூதியக் கொடுப்பனவு செய்யப்படாமல் இருந்தது. பின்னர் அவர்களில் இருவருக்கு 1996 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒருவருக்கு 1996 பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான ஓய்வூதியம் சிவில் நிர்வாக இணைப்பதிகாரி மூலம் வழங்கப்பட்டது. மிகுதி மூவருக்கும் எவ்வித கொடுப்பனவுமில்லை. 1996 மே, ஜூன், ஜூலை பற்றியும் எவ்வித தகவலுமில்லை.

ஆனால் இடம் பெயராதிருந்த அரசாங்க ஓய்வூதியருக்கு இங்கிருந்தபோது 1995 அக்டோபர் ஓய்வூதியம் வழங்கப்பட்டது பின்னர் 1996 ஜனவரி தொடக்கம் ஏப்ரல் வரை ஓய்வூதியம் சிவில் நிர்வாக இணைப்பதிகாரி மூலம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்களுக்கு 1995 மே, ஜூன் ஓய்வூதியமும், 1996 நவம்பர், டிசம்பர் ஓய்வூதியமும் வழங்கப்பட்டன. அரசாங்க செயலக ஓய்வூதியர் பணிமனை இதில் கவனம் செலுத்தியது.

முன்னர் குறிப்பிட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு, அவர்கள் கொழும்பு உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியப் பணிமனைக்கு நேரடியாகவும், யாழ். அரச அதிபர் ஊடாகவும் முறையீடு செய்தும் எதுவித பயனும் இல்லை.

திருமுகம்

மாதாந்தம் பெறவேண்டிய ஓய்வூதியம் ஓரிரு வாரம் தாமதமாகக் கிடைக்கும்போது எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. 1995 ஒக்ரோபரிலிருந்து ஓய்வூதியம் கிடைக்கவில்லை என்றால் படும் மனவேதனை, பொருளாதாரக் கஷ்டம், அவமானம், விரக்தி சொல்லுந்தரமன்று. இந்நிலை தொடர்ந்தால் வாழ்வு அஸ்தமித்து விடாதா? இவர்கள் ஓய்வூதியம் பெறாததற்கு யார் பொறுப்பு?

இவர்கள் விடயத்தில் யார் அக்கறை எடுப்பார்கள்? யாழ். அரச அதிபர் மனிதாபிமானமாகக் கவனமெடுக்கக் கூடாதா? வடமாநில ஓய்வூதியர் சங்கம் கருணை கூர்ந்து வழி காட்டுமா?

நா. குமாரசாமி.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

# செச்சின்யாவில் சண்டையை நிறுத்த பேச்சுவார்த்தை

கிக்காலி ஓக். 11

செச்சின்யாவின் தலைநகர் குரொஸ்னியில் நான்கு நாள் கடும் சண்டைக்குப் பின்னர் இப்போது ரஷ்யப்படைகளும், செச்சின்யக் கிளர்ச்சிக்காரர்களும் சண்டை நிறுத்தம் ஒன்றை கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

சென்ற செவ்வாய்க்கிழமையன்று குரொஸ்னி மீது கிளர்ச்சிக்காரர்கள் திடீர் தாக்குதல் நடத்தியது முதல் அங்கு சிக்கியுள்ள பொது மக்களையும், காயப்பட்டவர்களையும் வெளியேற்ற வேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டுக் கொண்டதற்கிணங்கவே சண்டை நிறுத்தம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

(இ-3)

## போராளிகளுடன் பேச இந்தியா தயார்

இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டு காஷ்மீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதேயானால் போராளிக் குழுக்களுடனும் பேச தாம் தயாராக இருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா நேற்று முன்தினம் ஸ்ரீநகரில் கூறினார்.

காஷ்மீர் மாநிலத்துக்கு மாகாண சுயாட்சி வழங்கக் கூட தயார் என ஐக்கிய முன்னணி அரசு முன்னர் அறிவித்திருந்தது. (இ-3)


பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

பண்டத்தரிப்பு

## வெற்றுச் சாக்கு விற்பனை

மேற்படி சங்கத்தில் இருக்கும் வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

மீளளிப்புப் பணமாக ரூபா **200/**ம் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா **100/**ம் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைச் சங்க வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திர முடிவுத் திகதி **19 - 08 - 1996**. கேள்விப் பத்திரங்கள் யாவும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு விற்பனை'' எனக் குறிப்பிட்டு சங்க விலாசமிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

வெற்றுப் பொருள் விவரம்

| | | |
|---|---|---|
| வெற்றுச் சாக்கு | — | 1900 |
| வெற்றுப் பைகள் | — | 2982 |
| | | 4882 |

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

(C/2745)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### சிவகடாக்ஷ ஐயர் மீனாட்சியம்மா

காரைநகர் மணற்காடு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவஸ்ரீ சோ. சிவகடாக்ஷ ஐயர் (குரு) அவர்களின் பாரியார் திருமதி மீனாட்சியம்மா 09-08-96 (வெள்ளிக்கிழமை) சிவபதமடைந்துள்ளார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-08-96 சனிக்கிழமை இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
''பிரதம சிவாச்சாரியார்''
இணுவில் சிவகாமி அம்மன் கோவில்

''ஸ்ரீவித்யா''
இணுவில் கிழக்கு
இணுவில்
சுன்னாகம்.

(42204)

### க. வி. நடராசா J. P.

(தர்மகர்த்தா, உசன் கந்தசுவாமி கோவில்)

க. வி. நடராசா J. P. [உசன் கந்தசுவாமி கோயில் தர்மகர்த்தா] 10 – 8 - 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பாக்கியலக்ஷ்மியின் அன்புக் கணவரும், பத்மாவதி, சத்தியவதியின் அன்புத் தந்தையும், பிரதீப்ருக்மன், விமலதாஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11 - 8 - 96 காலை 10 மணிக்கு உசனில் நடைபெறும்.

தகவல்:
கு. விமலதாஸ்
[மருமகன்]

[42213]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 11-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


# பல்கலைக்கழகங்களுக்கு 11,000 மாணவர் அனுமதி

## 15-ம் திகதியிலிருந்து விண்ணப்பிக்கலாம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 1996/97 கல்வியாண்டில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்க விருக்கிறது.

சென்ற வருட ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விண்ணப்பப்படிவங்கள் இம்மாதம் 15 ஆம் திகதியில் இருந்து வழங்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேச்சாளர் தெரிவித்தார். (இ-3)

# தமிழ்—முஸ்லிம் கட்சிகள் முதலில் இணக்கம் ஒன்றுக்கு வரவேண்டும்

## நேற்றைய சந்திப்பில் பீரிஸ் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 11

தமிழ் — முஸ்லிம் கட்சிகள் மத்தியில் ஓர் இணக்கம் ஏற்படுமானால் தீர்வு முயற்சிகள் எளிதில் கை கூடி விடும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆறு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்காக அரசு எடுத்து வரும் சகல முயற்சிகளுக்கும் தமிழ் — அரசியல் கட்சிகள் தொடர்ந்து ஆக்கபூர்வமான ஆதரவைத் தரவேண்டும்; இதை விடுத்து அவநம்பிக்கை தெரிவிக்கும் வகையில் அறிக்கைகள் வெளியிடுவதை அவை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பிராந்திய சபைக்குள் உருவாக்கப்படும் முஸ்லிம் அலகு குறித்தே தமிழ் — முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் இணக்கம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வில் ஐ. தே. க கொண்டுள்ள நிலைப்பாடும் தீர்வு ஒன்றை எட்டுவதில் முட்டுக்கட்டையை ஏற்படுத்தி இருக்கிறது என்றும் பீரிஸ் கூறினார்.

இந்தச் சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ், புளொட், ஈ. பி. டி. பி ஆகிய தமிழ் கட்சிகள் கலந்து கொண்டன.

இந்த ஆறு கட்சிகளும் அமைச்சர் பீரிஸைச் சந்திப்பதற்கு முன்னர், ஐ. தே. க. வுடனும் பேச்சு நடத்தி இருந்தன.

இந்த இரு சந்திப்புக்களும் முன்னேற்றகரமாக இருந்ததாக இக்கட்சிகள் தெரிவித்ததாக தினமின சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-10 3)

### கரடிப்போக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை நடத்துகின்றனர் என்றும் —

இராணுவ நடவடிக்கை தொடர்ந்து இடம் பெறுகின்றது என்றும் —

மேலும் அறிவிக்கப்பட்டது.

(உ-3)

### 38 ஈழ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள்—சில அகதிகளைக் கூட்டி வந்து அந்த மீனவர்களிடம் ஒப்படைத்து அவர்களை தமிழ்நாட்டில் சேர்த்துவிடுமாறு கேட்டதாக பி. பி. ஸி தகவல் வெளியிட்டது.

இவர்கள் மன்னார் அருகே பேசாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஏற்கனவே 1983 ஆம் ஆண்டுக் கலவரங்களின்போது தமிழ்நாட்டிற்கு வந்து மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த பின்னர் நிலைமை சீரடைய தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள்.

தற்போது தமிழகத்துக்கு வந்துள்ள 38 ஈழத் தமிழ் அகதிகளும் மண்டபம் முகாமிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளாக வருவோருக்கு அளிக்கப்படும் உதவிகள் விதிமுறைப்படி இவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

இலங்கையிலிருந்து முன்னைய காலங்களில் இடம்பெயர்ந்து சென்ற 57 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகள் இன்னும் தமிழகத்தில் தங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

(உ-3-10)

### டெண்டுல்கர்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் சிங்கர் கிண்ணம் மற்றும் சஹாராக் கிண்ணத்துக்கான இந்திய கிரிக்கட் அணியில் விளையாடும் பத்து வீரர்கள் பற்றிய விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது விவரம் வருமாறு:—

சர்ச்சின் டெண்டுல்கர் (கப்டன்), அனில் கும்ளே (உதவிக் கப்டன்), விக்ரம் ரதோல், அஜே ஜடேஜா, சவரோ ஹங்குணி, ராகுல் ரபிக், நயன் மொங்கியா (கீப்பர்), ஜவஹர் சிறீகாந்த், வெங்கடேஸ் பிரசாத், சுனில் ஜோசி.

(உ-3)

### தமது 2 பெரும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலர் குற்றஞ் சாட்டியது தெரிந்ததே.

முல்லைத்தீவு தாக்குதலின் போது முகாமிலிருந்து வெளியேறி வந்த படை அதிகாரிகள், படையினர் தம்மால் இயன்ற அளவு ஆயுதங்களை எடுத்து வந்துள்ளனர்.

அத்துடன் முல்லைத்தீவு முகாமில் 120 எம். எம். ரக மோட்டர்களில் நான்கு இருந்தன.

முகாம் தாக்கப்பட்டசமயம் அங்கு மூன்று டாங்கிகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டதில் உண்மை இல்லை. படையினரை ஏற்றிச் செல்லும் மூன்று ''பவள்'' வாகனங்ககளே அங்கு இருந்தன என்றும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

(இ)

### கீரிமலை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சிப்பாய் கொல்லப்பட மற்றும் ஒருவர் காயமடைந்ததாகவும் அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரும், காயம் அடைந்தவரும் பெண் சிப்பாய்கள் என்று செய்திஏஜென்சிகள் தெரிவித்திருந்தன.

(இ-3-10)

### சி. ஐ டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருதானை டார்லி வீதியில் உள்ள அவரது வீட்டைச் சோதனையிட்ட போது அங்கு பொலீஸ் சீருடைகள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டன.

இரகசியப் பொலீஸாருக்கான அடையாள அட்டையைக் காட்டிக் கொழும்பில் தமிழர்கள் நடத்தும் பல விடுதிகளுக்குச் சென்று —

அங்கு ஆயுதம் உண்டா என்று சோதனையிடப் போவதாக வெருட்டி, விடுதிகளின் சொந்தக்காரரிடம் பெருந்தொகைப்பணத்தைச் சுருட்டினார் என்றும் —

பல விடுதிகளில் அங்கு தங்கியிருந்தவர்களைப் பயமுறுத்தியும் பணம் பறித்தார் என்றும் — விசாரணைகள் மூலம தெரிய வந்துள்ளதாம்.

வசதி படைத்த தமிழர் வீடுகள் பலவற்றில் இனிமேலும் பணம் கறப்பதற்கு இவர் திட்டமிட்டிருந்தார் என்றும் அறியவந்துள்ளது.

(அ)

### 1,60,000 .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணிபுரிந்த தோட்டத் தொழிலாளர்கள் இந்தியா செல்ல விரும்பவில்லை.

அதனால் சுமார் 1,60,000 மலையகத் தமிழர்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெற வேண்டிய நிலை உள்ளது.

இது சம்பந்தமாக அமைச்சர் தொண்டமான், ஜனாதிபதி சந்திரிகாவை அண்மையில் சந்தித்துப் பேசினார்.

1, 60, 000 மலையகத் தமிழர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்குவதை விரைவுபடுத்த வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார். இது விடயத்தில் இனியும் தாமதம் செய்யக்கூடாது என்றும், உடன் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் நெருக்குதல் கொடுத்ததாக அறியவருகிறது.

வடக்கு — கிழக்குப் போர், இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி, பொருளாதார வீழ்ச்சி ஆகிய பிரச்சினைகள் சந்திரிகா அரசைச் சுற்றி வளைத்திருக்கும் இவ்வேளையில்—

மலையக மக்களின் பிரஜாவுரிமை விடயத்தைத் தொண்டமான் முன்வைத்திருப்பது—

அரசுக்கு மேலும் நெருக்கடிகளைக் கொடுக்கும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

எனினும் நாடாளுமன்றத்தில் இ.தொ. காவின் ஆதரவு அரசுக்குத் தேவை என்பதால் —

சந்திரிகா இது விடயத்தில் அசமந்தமாக இருப்பின் ஆபத்தாக முடியும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

(அ)